RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.54392/ijmrd223S123

# A Study on the Magnificence of Hospitality in Tamil Culture in Contemporary Literature

## சமகால இலக்கியங்களில் தமிழர் பண்பாட்டின் விருந்தோம்பல் பண்பின் மகத்துவம் - ஓர் ஆய்வு

**P. Nithya [a,*]**

[a] Department of Indian Culture and Tourism, Government Arts college (AUtonomous), Kumbakonam- 612002, Tamil Nadu, India.

*Corresponding author Email: p.nithya07@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S123

Received: 13-04-2022; Revised: 08-07-2022; Accepted: 14-07-202; Published: 19-08-2022

**Abstract:** Hospitality is very important in Tamil culture. Such qualities are admirable in life ethics. And the virtues of Tamil life are amazing, special, and the best guide for our lives. And through literature, we can know the excellence of Tamil culture. It is to preserve the virtues of hospitality and develop humanity through friendship. It is the opinion of the wise men that such noble hospitality should be followed. Hospitality is one of the highest human qualities. The attribute of feasting is the attribute of hunger. Feeding is a solution for appetite. Hospitality is a sense of community to eliminate hunger and disease. "Omputhal" (treating with civility) means accepting and praising someone who is not familiar. Hospitality occupies a high place among the family virtues. Literature shows that such a trait excels in all people. Hospitality in general is based on human mental development.

**Keywords:** Tamil Culture, Hospitality, Omputhal, humanity

**Language: Tamil**

### முன்னுரை

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் மிகவும் முக்கியமானதாகும். இத்தகைய பண்புகள் வாழ்வியல் அறநெறி போற்றும் வகையில் திகழ்ந்தவையே. மேலும் தமிழர் வாழ்வியல் அறங்கள் வியக்கக் கூடியதாகவும், சிறப்பு வாய்ந்ததாகவும், திகழ்வது நம் வாழ்வுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்குவது. மேலும் இலக்கியங்கள் வாயிலாகத் தமிழர் பண்பாட்டு சிறப்பினை நாம் அறிந்துக்கொள்ள முடியும். விருந்தோம்பல் என்னும் நற்பண்புகளைக் காத்து நட்புறவுடன் மனித நேயம் வளரச் செய்வதாகும். இத்தகைய தலையாய பண்பான விருந்தோம்பலை பின்பற்ற வேண்டும் என்பதே சான்றோர்களின் கருத்து.

மனிதப் பிறவியில் உயர்ந்த பண்புகளில் விருந்தோம்பல் பண்பும் ஒன்றாகும். விருந்து என்னும் பண்பு பசியாற்றும் பண்பாகும். உணவு அளித்தல், பசிப்பிணி தீர்த்தல். பசி என்னும் Nநாயை அகற்றல் என்னும் சமுதாய உணர்வே விருந்தோம்பல் பண்பாக திகழ்கின்றன. ஓம்புதல் என்றாலே அறிமுகம் இல்லாத ஒருவரை ஏற்றுப் போற்றுதல் எனப்படும். இல்லற பண்புகளில் விருந்தோம்பல் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. இத்தகைய பண்பு அனைத்து மக்களிடமும் சிறந்து விளங்கியதாக இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பொதுவாக விருந்தினரை உபசரித்தல் என்பது மனிதனுடைய மனவளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது.

### விருந்து - சொல்

தமிழனின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் விருந்து என்பதற்குப் புதுமை என்ற பொருளை உணர்த்துகிறது.

இதனை,

"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே" என்னும் கருத்தே மேற்கண்ட நூல்களின் வழியே நாம் அறியலாம். இன்று உற்றார், உறவினர் நண்பர்களையும் விருந்து என்கிறோம். ஆனால் பண்டையக் காலங்களில் முன் அறியாதவர்களாய் வீடு தேடி வருவதே விருந்தினர் எனப் பெற்றனர். அக்கால மக்கள் விருந்தினரை அகமும் முகமும் மலர வரவேற்று விருந்தோம்பினர்.

விருந்து - அகராதி சொல் விளக்கம் (Kathiraiverpillai, 2011)

விருந்து - புதிதாய் வந்தவர்க்கு உணவு கொடுத்தல்

விருந்து - புதியது

விருந்து - புதுமை, உணவளித்துப் போற்றுதல்

விருந்து - அதிதியருக்கு உணவளித்தல், புதுமை

புதியவன், நூல் வனப்புகளுள் ஒன்று

விருந்து - அதிதி முதலியோருக்கு உணவு கொடுத்து நூல்

வனப்புகளுள் ஒன்று

விருந்து - அதிதியருக்கு உணவு

## விருந்தோம்பல் - ஈகை

விருந்தோம்பலை ஈகை என்றும் கூறுவர். இதனை நீதிநெறி விளக்கத்தில் கூறப்படுகின்றது. இத்தகைய விருந்தோம்பலை யானையைக் கொண்டு விளக்குகின்றனர். தாம் பெறுகின்ற உணவு கவளத்தில் இருந்து சிறிதெனினும் சிந்தினாலும் யானைகள் மனம் நோகமாட்டாது. ஏனென்றால் சிதறிய உணவபானது கீழே ஊர்ந்து செல்லும் எறும்புகள் தங்கள் சுற்றத்தோடு உண்டு வாழும் என்பதாகும். இதனை,

வாங்கும் கவளத்(து) ஒருசிறிது வாய்தப்பின்

துங்கும் களிறோ துயருறா - ஆங்கதுகொண்(டு)

ஊரும் எறும்(பு) இங்(கு) ஒருகோடி உய்யுமால்

ஆளுங் கிளையோ பயின்று (Ekambaram, 2003)

## உயிரை காக்கும் விருந்தோம்பல்

தன்னிடம் அபயம் கேட்டு வருகிறவர்களுக்கு இடம் அளிப்பவனுடைய வீரமானது மகத்தானது என்று கூறப்படுகின்றது. சில நேரங்களில் கலவரங்கள், வன்முறையாளர்களின் தாக்குதல் போன்றவற்றில் இடையூறு ஏற்படும் மக்கள் அபயம் கேட்ட வருகிறவர்களை இடம் கொடுத்து எந்தவொரு எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் இடம் கொடுத்து உணவு கொடுத்து ஆதரிப்பது மகத்தான் ஒன்றாக திகழ்கின்றது. இது உயிரைக் காக்கும் விருந்தோம்பல். இவ்வகையான விருந்தோம்பலை இனியவை நாற்பது பெருமை பொருந்திய வீரத்திற்கு இணையாக கூறுகின்றது.

தானம் கொடுப்பின் தகையாண்மை முன்இனிதே

மானம் படவரின் வாழாமை முன்இனிதே

ஊனம்கொள் பாடார் உறுதி உடையவை

கோள் முறையாற் கோடல் இனிது (Balasubramanian, 2004)

## விருந்தோம்பல் - பகிர்ந்து உண்ணல்

வறுமை ஏற்பட்ட காலத்தில் தன்னுடைய பொருளைப் பகிர்ந்து உண்பவன், தன்னுடைய பொருளைத் தக்கவைத்து கொள்ளாமல் பிறருக்கு பகிர்ந்து கொடுப்பவன் உடைந்துப் போன தன் சேனைக்குள் அச்சமின்றி நுழைந்து எதிரிகளை வென்று தன் படையைக் காப்பவன், ஒவ்வொரு நாளும் தான் உண்பதற்கு முன்பே பிறருக்கு உணவிட்டு உண்பவன், குழந்தைகளுக்கு உணவு அளிப்பவன் ஆகிய ஐவரும் எண்பது வயதிற்கும் மேலாக வாழ்வார்கள் என்று சிறுபஞ்சமூலம் வாழ்த்துகிறது.

பஞ்சப் பொழுது அகத்தே பாத்துண்பான் காவாதான்

அஞ்சாது உடைமையுள் போந்து எறிவான் - எஞ்சாதே

உண்பதுமுன் ஈவான் குழவியலி கொடுப்பான்

என்பதின் மேலும் வாழ்வான் (Balasubramanian, 2004)

## விருந்தோம்பல் - ஒழுக்கம்

எந்நிலையிலும் ஒழுக்கத்தில் இருந்து மாறுபடாதவர்கள் விருந்தினர்கள். மூத்தவர், பசுக்கள், பறவைகள், பிள்ளைகள் ஆகியோர்களுக்கெல்லாம் உணவு கொடுக்காமல் உண்ண மாட்டார்கள் என்று குறிப்பிட்டுளளது. இதனை,

விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை

இவர்க்கூண் கொடுத்தலல்லால் உண்ணாரே யென்றும்

ஒழுக்கம் பழையா தவர் (Balasubramanian, 2004)

## உபசரிக்கும் முறை

விருந்தினர்களை எவ்வாறு உபசரிக்க வேண்டும் என்பதை தமிழ் இலக்கியங்களில் கூறப்படுகிறது. இன்முகத்துடன் இன்சொல், காலை கழுவ நீர், அமர்வதற்கு மனை, படுக்கப் பாய், தங்குவதற்கு இடம் என்கின்ற ஐந்தும் நம்மிடம் வந்த விருந்தினருக்கு உணவோடு இவையனைத்தும் சிறப்பான செயல்களாகும். இதனை,

முறுவல் இனிதுரை கால்நீர் மனைபாய்

கிடக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச் சென்றார்க்

ஊணொடு செய்யும் சிறப்பு (Balasubramanian, 2004)

## தேவர்கள் விருந்தாளி

இல்லம் நோக்கி வரும் விருந்தினரை இனிய சொற்களோடு கூறி வரவேற்பதும், மனமார உரையாடுவதும், அமர்வதற்கு இருக்கை அளிப்பதும், அறுசுவை உணவளிப்பதும், கடுமையான சொற்களை கூறாமலும், நற்சொற்களை கூறுவதும் என்னும் ஆறு பண்புகளை கொண்டு விருந்தளிப்பவர் தேவனின் விருந்தாளியாக கருதப்படுவர்.

இன்சொ லளாவ இடமினிதுண் யாவர்க்கும்

வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்

முருந்தேய்க்கு முட்டோ லெயிற்றினாய் நாளும்

விருந்தேற்பவர் விண்ணோர் விரைந்து (Balasubramanian, 2004)

### விருந்தோம்பல் - அறம்

அறம் என்றால் மற்றவர்களுக்கு உணவும், உடையும் உறையுளும் கொடுப்பது என்பதாகும். ஆதைத் இதற்கு மேலாக அறம் என்பது ஒன்று இல்லை என்னும் கருத்தை மையமாக மணிமேகலைக் கொண்டுள்ளது. இவை மூன்றில் முதன்மையானது உணவு. ஊணவை கொடுக்கும் போது உயிரை நீட்டிக்கிறவர்களாகவும் கருதப்படுவோம். இதனை 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பத திருமந்திரம்.

அறம் எனப்படுவது யாது எனக்கேட்டின்

மறவாது இதுகேள் மின்உயிர்க்கு எல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும்

அல்லது கண்டது இல் (Singaravelu Mudaliar, 2020)

### இல்லற பெண்ணின் விருந்தோம்பல் பண்பு

இல்லற மகளிரின் முக்கிய பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். பெண்ணின் இலக்கணம் கூறும் தொல்காப்பியர் இல்லறத் தலைவியின் கடமைகளைக் கூறும்போது விருந்தோம்பல் பண்பாட்டையும் கூறுகின்றார். இதனை,

'விருந்து புறத்தருதலும் சுற்ற மோம்பலும்' (Ilampuranar, 2005)

இல்லறம் - இல்ல ம் அறம் என்பது இல்லத்தினுடைய நோக்கமே அறம் ஓம்புவது என்பதாகும். ஆறம் என்பது விருந்தோம்பலைக் குறிக்கும். தலைவன் புறத்தொழக்க மேற்கொளும் போது விருந்தோற்றுவதன் பொருட்டு 'நெற்பல பொலிக' என்றும் 'விளைக வயலே' என்றும் இல்லறக் கடமையை நினைத்து ஒழுகும் தலைவியின் பண்பாட்டினை ஐங்குறுநூறு எடுத்துயம்புகிறது. மேலும் இல்லறம் என்பது கணவன், மனைவி ஆகியோர் சேர்ந்து வாழும் நிலையை குறிக்கும். இவ்விருவரையும் சேர்த்து வைக்கும் கருவி திருமணம் என்பதாகும். திருமணம் என்பது கற்பு வாழ்க்கைக்கு அடிப்படையாக திகழ்கின்றது. திருமணம் செய்து கொள்வதன் நோக்கமே மலத் திறந்த வாயிலில் விருந்தினருக்கு வரையாது விருந்திட்டு எஞ்சியதைத் தாமுண்டு அறம் புரியும் வாழ்க்கை மேற்கொள்வதற்காகத்தான் என்ற கபிலரின் கருத்தின் வழியே திருமணத்தில் விருந்து இடம் பெற்றதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும் இல்லறக் கடமைகளுள் ஒன்றாக விருந்தோம்பலைக் குறிப்பிட்டுள்ளார். கோவலன் திருமணம் முடிந்தபின் கண்ணகியுடன் சில ஆண்டுகள் வாழ்ந்ததாக,

"மறப்பெருங் கேண்மையோ பறப்பரி சாரமும்

விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்"

என்று மனையறம்படுத்த காதை காட்டுகின்றது (Singaravelu Mudaliar, 2020).

கற்பின் செல்வி கண்ணகி கோவலன் பிரிந்த போது

"தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை"

என்று விருந்தோம்பலை இழந்தற்காக வருந்துகின்றாள் (Singaravelu Mudaliar, 2020).

இத்தமிழ் பண்பாட்டினைக் கம்பர் இராமனைப் பிரிந்து அசோகவனத்தில் இருக்கும் சீதையின் வாயிலாகக் காட்டுகின்றார்.

"அருந்து மெல்லடகு ஆரிட அருந்து மென்று அழுங்கும்

விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்

மருந்தும் வண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்

இருந்த மாநிலம் செல்லரித் திடவு மாண்டெழாதான்" (Irai Anbu, 2020)

## முடிவுரை

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் பண்பு மகத்தானது ஆகும். இதுவே தமிழரின் அடிப்படை பண்பாகும். நல்லவர்கள் பலரைக் காண்பதற்கும் அவர் சொல் கேட்பதற்கும் அவரோடு பழகுவதற்கும் விருந்தோம்பல் உறுதுணையாக திகழ்கின்றது. விருந்தோம்பல் மனிதநேயத்தினை வளர்க்கக் கூடிய பண்பாகும். இத்தகைய விருந்தோம்பல் என்றால் உணவு அளிப்பது மட்டுமே அல்ல. எவர் ஒருவர் கல்வி, மருந்து, உணவு இவை மூன்றையும் எந்த ஒரு எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் அளித்து செயல்படுகிறாரோ அவரே சிறந்த விருந்தோம்பல் பண்பை கொண்டவராக கருதப்படுகிறார். மேலும் ஈகை, ஒழுக்கம், பகிர்ந்துண்ணல், அறம் இவையனைத்தும் தமிழ்மக்களின் பண்பாட்டு விழுமியங்களாக திகழ்கின்றன. இக்கட்டுரையில் சமகால இலக்கியங்கள் வெளிப்படுத்தும் மேற்கூறிய விழுமியங்கள் விருந்தோம்பல் பண்பின் மகத்துவமாக திகழ்கின்றது. ஆகவே, இத்தகைய நம் தமிழர் அடையாளங்களை நாமும் பின்பற்றி பசி வறுமை போன்றவை இன்றி இவ்வுலகை மகத்துவமிக்க உலகாக மாற்றுவோம்.

## References


Balasubramanian, K.V., (2004) Purananooru, New Century Book House, Chennai, India

Ekambaram, A., (2003) Tamilarin Virunthombal Andrum Indrum, Subam Printers, Chidambaram, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha Pathippagam, Chennai, Tamil Nadu, India.

Irai Anbu, (2020) Ilakkiyathil Virunthombal, Karpagam Puthakalayam, Chennai, India.

Kanthaiya Pillai, N.C., (2019) Senthamil Agarathi, Seethai Pathipagam, Chennai, India.

Kathiraiverpillai, N., (2011) Tamil Mozhi Agrathi, Gowra Pathippagam, Chennai, India.

Kazhaga Pulavar Kuluvinar, (2010) Kazhaga Tamil Agarathi, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Manimekalai, (2008) Manimekalai Tamil Sollagarathi, Manimekalai Pirasuram, Chennai, India.

Singaravelu Mudaliar, A., (2020) Abithana Chintamani, The Asian Publications, Chennai, India.



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.


### About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



### Cite this Article

P Nithya, A Study on the Magnificence of Hospitality in Tamil Culture in Contemporary Literature, Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 116-120. DOI: https://doi.org/10.54392/ijmrd223123